AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 4

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்



அடுத்த மாதம் முதல் நமது சத்வித்யா இதழ் மாதம் 2 இரு முறையாக வெளிவரும்

## அங்காள பரமேஸ்வரி மகிமை

★ அக்டோபர் மாத ராசிபலன்கள் ★ பெயர் எண்களின் சிறப்பு

★ ஹோமங்களின் பலன்கள் ★ சித்தர் பூமி

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 95004 95008, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



நமது மதத்தில் கடைபிடிக்கப்படும் சடங்குகள் அனைத்துமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆலயங்களில் விக்ரஹங்களுக்கு செய்யப்படும் அபிஷேகம் என்பது, வீணானது என்ற விமர்சனமும் உள்ளது. ஆனால், இதிலும் ஒரு விஞ்ஞானம் உள்ளது, ஒருவரது உடலில் நீர்ச்சத்து குறையும்போது டீஹைட்ரேஷன் என்னும் நிலை உருவாகி பாதிப்பு ஏற்படும். அதேபோல விக்ரஹங்களுக்குபால் மற்றும் திரவங்களால் அபிஷேகம் செய்விக்கும்போது அந்த சிலை ஹைட்ரஜன் நிலையை அடைந்து சக்தி பெறுகிறது. அதாவது ஹைட்ரஜன் கண்டெண்ட் அதிகமாகிறது. இதுவே அபிஷேகம் செய்யப்படுவதின் தத்துவம்.

~ Dr. Baskaran Pillai





இணையதள வாசகர்கள் அனைவருக்கும் எங்கள் சத்வித்யா இதழின் அன்பான வணக்கம்!

இது நமது சத்வித்யாவின் அக்டோபர் மாத இதழ்! அக்டோபர் மாதத்தில் புரட்டாசி, ஐப்பசி என்னும் தமிழ் மாதத்தின் பகுதிகள் இடம் பெறுகின்றன. அதோடு, நவராத்திரி, தீபாவளி போன்ற முக்கிய பண்டிகை கொண்டாட்டங்கள் இந்த அக்டோபர் மாதத்தில் இடம் பெறுகின்றன ஊரடங்கிலிருந்து மீண்டு வந்திருக்கும் மக்கள், உலகம் முழுக்க நிம்மதியுடன் வாழ இறைவனை இறைஞ்சுவோம். இந்த இதழைத் தொடங்கும்போது திட்டமிட்டபடியே ஆன்மிகம், ஜோதிடம் பயனுள்ள குறிப்புகள் என்று நேயர்கள் பயன்பெறும் அம்சங்கள் உள்ளதாக எண்ணுகிறோம்! ஆதரவிற்கு நன்றி!

அன்புடன்

(அச்சிட்டு வெளியிடுவோர்) ஆஸ்ட்ரோவேட்.காம்

# மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன்

உலகைக் காக்கும் இறைவன் ஈசனுக்கு ஐந்து முகங்கள்! சத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம் ஈசான்யம், அதோமுகம் என்பவை அவை! இதைத்தான் சிவனுக்கு ஐந்து தலைகள் என்பர்! உலகையே கட்டிக்காக்கும் ஈசனுக்கு ஐந்து தலைகள் இருப்பதைப் போலவே, நான் முகன் என போற்றப்படும் பிரம்மனுக்கும் ஒரு காலத்தில் ஐந்து தலைகள் இருந்தது! சிவனுக்கும் ஐந்து தலை; எனக்கும் ஐந்து தலை! எனவே, நான் எந்த விதத்திலும் குறைந்தவன் இல்லை; சிவனுக்கு இணையானவன் நான் என்று ஆணவம் பிரம்மனிடம் தலை தூக்கியது!



ஆணவம், கன்மம், மாயை எனப்படுகின்ற மும்மலங்களை அழிக்கும் கடவுளான ஈசன், பிரம்மனின் ஆணவத்தை அழிக்கும் பொருட்டு வெகுண்டெழுந்தார்! தலையின் எண்ணிக்கை தான் செருக்குக்குக் காரணம் என்றால் அதை குறைப்பது தானே சரியான தண்டனை? ஆம்! பிரம்மனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்துவிட்டார்!

வேதத்தின் தலைவன் ஈசன் என்றால், வேதங்களின் வித்தாய் விளங்குபவர் பிரம்மன்! அந்த பிரம்மனின் தலையைக் கொய்ததால் சிவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது! அதோடு, கொய்யப்பட்ட பிரம்மனின் தலையானது திருவோடாய் மாறி சிவனின் கைகளில் பிரம்ம கபாலபாய் ஒட்டிக் கொண்டது!

அந்த திருவோடு நிரம்பி, என்றைக்கு சிவனின் கையை விட்டு அகல்கிறதோ அன்றுதான் சிவனைப் பிடித்த பிரம்மஹத்தி தோஷம் நீங்கும் என்பது சாபம்! இந்த சாபத்தின் பொருட்டுதான் இறைவன் ஈசன், பிச்சாடனர் கோலம் கொண்டு பிச்சை ஏற்றார் என்பதும் பலகாலம் அந்த கபாலம் நிறையாடல் சிவனுக்கு உன்மத்த நிலை உண்டானது என்பதும் புராணங்கள் பறைசாற்றும் உண்மை?

சிவனைப் பிடித்த பிரம்மஹத்தி தோஷம் நீங்க, அம்பாள் ஆலயங்களில் நடைபெறும் வைபவம் தான் மயானக் கொள்ளை என்னும் விழா? ஒவ்வோர் ஆண்டும் மாசிமாதம் மகாசிவராத்திரிக்கு மறுநாள்



அமாவாசை திதியில் இந்த மயானக்கொள்ளை எனும் நிகழ்வு அங்காளம்மன் ஆலயங்கள் அனைத்திலும் இந்த விழா நடைபெறும்!

அனால், புராணரீதியாக சிவனின் பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய திருத்தலம் மேல்மலையனூர் தான்!
எனவே, மேல்மலையனூர் என்ற திருத்தலத்திற்கு ஏகப்பட்ட சிறப்புகள் உண்டு

புராணப்படி, நெடுங்காலமாய் நிறையாத சிவனின் திருவோடு மேல்மலையனூர் நடைபெற்ற மயானக் கொள்ளையில் தான் நிரம்பியது!

இதில் ஏகப்பட்ட சுவாரஸ்யங்கள் உண்டு. இந்த ஆலயம் சுடுகாடு மற்றும் இடுகாட்டுக்கு மத்தியில் அம்மன் குடிகொண்ட ஆலயம்! அம்மனின் இருப்பை சுற்றி சிறு பூங்காவனம்! எனவே இந்த அம்மனுக்கு பூங்காவனத்தம்மன் என்ற பெயரும் உண்டு.

பிராமண தெய்வமான வேதவித்து பிரம்மணின் கபாலமான திருவோடு எந்த உணவு, எவ்வளவு தானியம் போட்டாலும் அதையும் தனக்குள் வாங்கி, நிரம்பாமலே இருந்தது! இந்த தலத்தில் தன் தலைவனாம் ஈசனின் தோஷத்தைப் போக்க அம்பாள் நடத்திய திருவிளையாடல் தான் மயானக் கொள்ளை?
கணவனின் பிச்சைக் கோலத்தைக் கண்டு ஆவேசமடைந்த அன்னை அங்காள பரமேஸ்வரி, இந்த சுடுகாட்டில் எரியும் பினத்தின் உடற்பாகங்கள், புதைத்த உடலின் குடல் மற்றும் உயிரற்ற உடற் பாகங்களையெல்லாம் ஆவேசமாக அள்ளி அள்ளி கபாலத்தில் இட, அதையேயெல்லாம் பொறுக்கு முடியாத பிரம்ம கபாலம் என்னும் திருவோடு, அருவெறுப்பு தாளாமல் சிவனின் கையை விட்டு விலகிட, பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து சிவன் விடுபட்டார்! இது தான் இந்த தலத்தில் நடந்த புராண நிகழ்வு?

சிவனின் பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய பிறகுதான் அம்மனின் ஆவேசம் தணிந்தது, அதைப் பிரதிபலிக்கும் விதமாக இன்றளவும் மயானக் கொள்ளை அன்று, சுற்றிலும் உள்ள விவசாய பெருமக்கள் தங்கள் நிலத்தில் விளைந்த தானியங்களையும் தங்கள் வீட்டில் செய்த பலகாரங்களையும் பிரம்ம கபாலத்திற்கு படைக்கும் பொருட்டு கொண்டு வந்து குவிப்பார்கள் அதோடு, அன்னையின் ஆவேசத்தை உணர்த்தும் வகையில் ஆடு, கோழி இவற்றின் குடல்களையும் திருவோட்டில் சேர்ப்பது போல் நிகழ்த்திக் காட்டுவார்கள்.

## வேறெங்கும் இல்லாத அதிசயங்கள்

மயானக்கொள்ளை நடக்கும் நாளில் எரிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மரணம் நிகழும். ஆலயத்தின் சன்னதியில் இறந்தவர் உடலை எரித்த சாம்பலே விபூதி பிரசாதமாக வழங்கப்படுகிறது. சுமார் 500 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த ஆலயம்! கருவறையில், அமர்ந்த நிலையில் அங்காள பரமேஸ்வரியின் பிரம்மாண்ட தோற்றம்! அருகிலேயே இரண்டடி உயரத்தில் சிவனின் சிலாரூபம் உள்ளது. மூலவரான அம்மனை அருகிலே போய்தான் வணங்கவேண்டும்! காரணம், அம்மனுக்கு எதிரில் வெளியே மிகப்பெரிய புற்று அமைந்துள்ள அதிசய திருத்தளம் இது!

## அம்மனின் புற்று மண்ணே பல நோய்களைத்தீர்க்கும் மகிமை கொண்டது!

புற்றுருவில் நாகவடிவில் அம்பாள் அங்காள பரமேஸ்வரி இங்கே வீற்றிருக்கிறாள்.
மாசிமாதம் நடைபெறும் பிரம் மோற்சவத்தில் 7ம் நாள் நடைபெறும் தேர், ஒவ்வோர் ஆண்டும் புதிதாக உருவாக்கப்படுகிறது.



ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவில் நடைபெறும் ஊஞ்சல் உற்சவம் மிகவும் சிறப்பானது. அம்மனை ஊஞ்சலில் கண்டு, தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ள லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவது சிறப்பு!

மீனவர்கள் எனப்படும் பர்வத ராஜ குலத்தினர் இங்கே பூஜைகள் செய்யும் உரிமை பெற்றிருக்கின்றனர். சிவனின் தோஷம் நீங்கி, உன்மத்த நிலை தீர்ந்ததால் இந்த தலத்தில் பேய் பிடித்தவர்கள் மன நிலை பாதிக்கப்பட்டோர் குணமடைகிறார்கள். மேலும் பெரியாயி, பாவாடைராயன் போன்ற உபதெய்வங்களும் அருளாகிபுரிகின்றன.

புற்றுருவாய் வந்த அங்காளம்மன் வேண்டிட புது வாழ்வு உண்டாகும்! ஓம் சக்தி!

~ பன்னீர்செல்வம்



KABA SURA KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 95004 95008

# மூலிகை ரகசியம்



## தூதுவேளை (Solanum Trilobatum)

வளரியல்பு: ஏறுகோடி

மாற்றுப்பெயர்: தூதுவளை, தூதுவனம், தூதுளை, சிங்கவல்லி.

மருத்துவத்திற்கு பயன்படும் பாகங்கள்: இலை, பூ, காய், தண்டு, வேர், பழம்.

மருத்துவப்பயன்கள்: முழுத்தாவரம், கசப்பு, காரச் சுவைகளும், வெப்பத்தன்மை உடையவை

இலை: கோழையகற்றும், உடலைத்தேற்றும், காமம் பெருக்கும், உணவின் சுவையைக் கூட்டும்.

பூ: உடலை உரமாக்கும், காமம் பெருக்கும்.



காய்: கோழையகற்றும், பசியைத்தூண்டும், மலச்சிக்கலைப் போக்கும்.

பழம்: மார்புச்சளி, மார்புவலி, கோழையை கட்டுப்படுத்தும்.

இலை: இலையில் இருந்து புற்று நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கும் ஆய்வுகள் நடை பெற்றுள்ளது.

மார்புச்சளி நீங்க: தூதுவளைக் காயை தேய்த்துவிட்டு வதக்கி, குழம்புவைத்து தொடர்ந்து சாப்பிட்டு வர நோய் நீங்கும்.

சளியுடன் கூடிய இருமல் குணமாக: ஒரு டம்ளர் நீருக்கு 10 இலைகள் என்ற அளவில் குடிநீராகச் செய்து குடித்து வர தினமும் இரண்டு வேளை 3 தினங்களுக்கு. நோய் தீரும்.

மலச்சிக்கல் தீர: காயை உலர்த்தி தயிர், உப்பு ஆகியவற்றில் பதப்படுத்தி வைத்துக் கொண்டு, எண்ணையில் வறுத்து இரவில் மட்டும் சாப்பிட வேண்டும்.

இராமலிங்க வள்ளலார்: நல்ல ஞாபக சக்தியை தரும், உடல் அசதிபோக்கும், சளியை வெளிப்படுத்தும், தேகம் மிகவும் வலுவுள்ளதாக மாற்றும் என்று கூறியுள்ளார் .

ஆண்மை பெருக: தூது வேளைப் பூவை உலர்த்தி தூள் செய்து வைத்துக் கொள்ளவும், 1/2 தேக்கரண்டி அளவு தினமும் காலையில் பாலுடன் சாப்பிடவும்.

தூது வேளைத் துவையல்: இலையை சுத்தப்படுத்தி துவையல் செய்து சாப்பிட்டால் இருமல், சளி, கோழைக்கட்டு, மூச்சுத்திணறல் குணமாகும், மற்றும் செரிமானத் தன்மை அதிகரிக்கும், குரல் இனிமையாகும். இந்த மூலிகை காயகற்ப மூலிகை.

~ டாக்டர் தங்கமணி

# ஹோமங்களின் பலன்கள்

**சுதர்ஸன ஹோமம் :** நம் பகைவர்களை அழிக்கவும், நமக்கு வேண்டாதவர்கள் வைத்த பில்லி, சூனியம், ஏவல் உள்ளிட்ட தீய சக்திகளை அழிக்க சுதர்ஸன ஹோமம் செய்ய, சகல காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

**ருத்ர ஹோமம் :** ருத்திர ஹோமம் செய்ய கோபம் குறைந்து ஆயுள் விருத்தி ஏற்படும்.



**லக்ஷ்மி குபேர ஹோமம் :** வறுமை நீங்கி செல்வ வளம் அதிகரிக்க, பொருளாதாரம் உயர செய்யப்பட வேண்டியது லக்ஷ்மி குபேர ஹோமம்.

**தில ஹோமம் :** சனி பகவானால் ஏற்பட்ட தோஷம், இறந்தவர்களின் சாபத்தால் ஏற்பட்ட பாதிப்பை போக்க தில ஹோமம் செய்வது அவசியம்.

**மிருத்யுஞ்ச ஹோமம் :** மாந்தி கிரகம் சனி பகவானின் மைந்தன் என கூறப்படுகிறது. அதனால் அது அமைந்திருக்கும் இடமும் பாதகத்தை தரக்கூடும். இந்த தோஷத்தை நீக்கவும், பிரேத சாபத்தை நீக்கவும் மிருத்யுஞ்ச ஹோமம் செய்வது நல்லது.

**புத்திர கமோஷ்டி ஹோமம் :** புத்திர பாக்கியத்தை பெற நாம் புத்திர கமோஷ்டி ஹோமம் செய்வது நல்லது.

**சுயம்வரகலா பார்வதி ஹோமம் :** நீண்ட காலமாக பெண்களுக்கு ஏற்படக் கூடிய திருமண தடை நீங்க சுயம்வரகலா பார்வதி ஹோமம் செய்ய விரைவில் திருமணம் நடைபெறும்.

**ஸ்ரீகாந்தர்வ ராஜ ஹோமம் :** நீண்ட காலமாக ஆண்களுக்கு இருக்கும் திருமண தடையை நீக்கி விரைவில் திருமணம் நடைபெற ஸ்ரீகாந்தர்வ ராஜ ஹோமம் செய்வது நல்லது.

ஹோமம் செய்வதால் ஹோமத்தில் இடப்படும் மூலிகைப் பொருட்கள் அக்னியில் எரியும் பொழுது அவ்விடத்தில் பாசிட்டிவ் எனர்ஜி பரவுகிறது அந்நேரத்தில் ஜபிக்க ப்படும் மந்திரங்கள் உச்சாடனங்கள் ஒரு வித எனர்ஜியை நமக்கு கொடுக்கிறது எனவே ஒவ்வொருவரும் இரண்டு வருடத்திற்கு ஒரு முறையாவது தில ஹோமம் கணபதி ஹோமம் போன்ற பொதுவான சகல ஐஸ்வர்யங்களை பெறக்கூடிய ஹோமங்களை செய்வது மிகவும் நல்லது

ஸ்ரீப்ரத்யங்கிரா ஹோமம் : எதிரிகளின் தொல்லைகளிலிருந்து விடுதலை பெரவும், உடல் ஆரோக்கிய பிரச்சினை, நோய்களை நீக்கி நலம் பெறவும் ஸ்ரீப்ரத்யங்கிரா ஹோமம் செய்யவும்.

ஸ்ரீபிரம்மஹத்தி ஹோமம் : தொழில், வியாபாரம், வாழ்க்கையில் இருக்கும் எதிரிகளின் தொல்லைகள், சூழ்ச்சிகளை நீக்கி, எடுத்த காரியங்களில் வெற்றி மேல் வெற்றி பெற ஸ்ரீபிரம்மஹத்தி ஹோமம் செய்வது நல்லது.

ஹோமங்கள் தொன்றுதொட்டு பண்டையகால மக்கள் முதல் செய்யப்பட்டு வந்துள்ளதை வரலாற்றின் மூலம் நாம் அறிகிறோம் அப்படி என்றால் ஹோமம் யாகம் இவற்றின் மூலம் நாம் ஒரு வித பாசிட்டிவ் எனர்ஜி பெறமுடியும் என்ற கருத்து உணர முடிகிறது

## சண்டி ஹோமம் செய்யும் முறை மற்றும் பலன்கள்!!

சாண்டி ஹோம்மேட்



உலகை ஆளும் அன்னை பார்வதி பல காலங்களில் பல வடிவங்களை எடுத்து உலகை காத்தருளி வந்திருக்கிறாள். அதில் அரக்கர்களை வதம் செய்ய அன்னை எடுத்த வடிவம் "துர்கா தேவி" வடிவமாகும். அந்த துர்க்கா தேவிக்கு மங்கள சண்டிகா என்கிற ஒரு பெயரும் உண்டும். துர்க்கையின் அருளை பெறுவதற்கு செய்யப்படும் ஒரு ஹோமம் தான் "சண்டி ஹோமம்" எனப்படும். இந்த சண்டி ஹோமம் செய்யும் முறை குறித்தும், அதனால் ஏற்படும் பலன்கள் பற்றியும் பார்ப்போம்.

சண்டி ஹோமம் ஒரு பிரம்மாண்ட ஹோமம் என்பதால் நடுத்தர, பொருளாதார வசதி மிகுந்தவர்களால் மட்டுமே செய்ய முடிகின்ற ஒரு ஹோமமாக இருக்கிறது. ஏனெனில் சக்தி வாய்ந்த இந்த ஹோமம் செய்வதற்கு பல வருடங்கள் ஹோம பூஜை செய்வதில் அனுபவம் பெற்ற 9 வேதியர்களை கொண்டு செய்யப்படுவதால் நிச்சயமான பலன்களை ஹோம பூஜை செய்பவர்களுக்கு தருகின்றது.
சண்டி ஹோமம் செய்வதற்கு அனுபவம் வாய்ந்த வேதியர்கள் குறித்து தரும் சுப தினத்தில் உங்கள் வீட்டிலோ அல்லது உங்கள் சார்பாக கோயிலிலோ, ஹோமம் செய்வதற்கான பொருட்கள் மற்றும் இன்ன பிற ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும். ஹோமம் செய்யப்படும் தினத்தில் நீங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினர் அதிகாலையில் எழுந்து குளித்து முடித்து, முடிந்தால் உணவேதும் அருந்தாமல் இருந்து ஹோமத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

இந்த ஹோமத்தில் பல தெய்வங்களை பூஜித்தும், 700 கும் மேற்பட்ட சக்திவாய்ந்த மந்திர உருவேற்றி

பூஜை செய்யப்படுவதால் பூஜை செய்பவர்களுக்கு உறுதியான பலன்களை அளிக்கிறது. ஹோம பூஜையின் போது வேதியர்கள் உங்களுக்கு கூறும் முறைப்படி மனதில் முழுமையான பக்தியோடு நீங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தார் பூஜைகள் செய்திட வேண்டும். பூஜையின் இறுதியில் 2 வயது முதல் 10 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் துர்க்கா தேவியாக பாவித்து, மரியாதை செய்யப்பட்டு, அவர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பிற பரிசு பொருட்கள் வழங்கி அவர்களின் ஆசிகளை பெறுகிறார்கள்.
ஹோமம் முடிந்ததும் ரட்சை எனப்படும் ஹோம பஸ்பம் உங்களுக்கு பிரசாதமாக தரப்படுகிறது. அதை உங்கள் பூஜையறையில் வைத்து தினமும் உங்கள் நெற்றியில் திலகமிட்டு வருவது நன்மைகளை தரும். சண்டி ஹோமம் பூஜை செய்வதால் வாழ்வில் ஏற்படும் தடை, தாமதங்கள் நீங்கும். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் திருஷ்டிகள், மறைமுக எதிரிகள், துஷ்ட சக்தி பாதிப்புகள், குல சாபங்கள் ஆகிய அனைத்தையும் போக்கும். வீட்டில் தரித்திர நிலை நீங்கி செல்வம் பெருகும். நீண்ட ஆயுள் மற்றும் நோய்கள் அணுகாத வாழ்க்கை குடும்பத்தினருக்கு உண்டாகும். வசதி வாய்ப்புள்ளவர்கள் வருடத்திற் கொரு முறை இந்த ஹோமம் செய்வதால் நன்மைகள் மேன் மேலும் அதிகரிக்கும்.

ஹோமத்தில் அர்ப்பணிக்கப்படும் அனைத்து பொருட்களும் அவரவருக்கு உரியதை சூரியபகவான் உதவியுடன் சென்றடைகிறது. அதே போல் சூரியபகவான் மூலமாகவே அதற்குரிய பலனும் நம்மை அடைகிறது.

இந்து மத சாஸ்திரங்களில் அக்னியை வழிபடுவது காலம் காலமாக இருந்து வரும் வழக்கம். மிக சிரத்தையுடனும், தூய்மையான மனதுடன் அர்பணிப்பு உணர்வுடன் செய்யப்படும் ஹோமத்திற்கு பலன் நிச்சயம்.ஹோமத்தில் அர்ப்பணிக்கப்படும் அனைத்து பொருட்களையும் அவரவருக்கு உரியதை சூரியபகவான் உதவியுடன் சென்றடைகிறது. அதே போல் சூரியபகவான் மூலமாகவே அதற்குறிய பலனும் நம்மை அடைகிறது.நம்முடைய தேவைகள் மற்றும் பிரச்சினைக்கு ஏற்ப ஹோமங்கள் செய்து வழிபட்டால் பலன் நிச்சயம்.ஹோமங்களின் பலன்கள் நம் கண்களுக்கு தெரியாவிட்டாலும்,அதன் பலன் இறைவனை சூட்சுமமாக அடைந்து, நம்மை சேர வேண்டிய காலத்தில் வந்து அடையும்.

மகா கணபதி ஹோமம் - தடையின்றி செயல்கள் நடைபெறவும், மகாலட்சுமி அருள் பெறவும் இந்த ஹோமத்தை செய்யலாம்.

சந்தான கணபதி ஹோமம் - நீண்ட நாட்களாக குழந்தையில்லா தம்பதியர் இந்த ஹோமம் செய்திட புத்திர பாக்கியம் கிட்டும்.

___ கல்விக்காக செய்யப்படும்.

மோகன கணபதி ஹோமம் - திருமணம் தடை நீக்கும்.

ஸ்வர்ண  கணபதி ஹோமம் - வியாபாரத்தில் லாபம் கிடைக்க செய்யப்படும் ஹோமம்.

நவகிரக ஹோமம் - நவகிரகங்களினால் ஏற்படக் கூடிய பதிப்புகள் விலகவும், நன்மைகள் ஏற்படவும் செய்யலாம்.

லட்சுமி குபேர ஹோமம் - இந்த ஹோமத்தை செய்வதால், பரம ஏழையும் குபேரனாவான்.

துர்கா ஹோமம் - எதிரிகளின் தொல்லை அகல

சுதர்சன ஹோமம் - கடன் தொல்லை நீங்க,பில்லி சூன்யம் ஏவல்கள் அகல

ஆயுஷ் ஹோமம் - ஆயுள்விருத்தியாகவும், நோய்களில் இருந்து நிவாரணம் கிடைக்கவும் செய்யப்படும் ஹோமம்.

மிருத்யுஞ்ச ஹோமம் -  இதுவும் ஆயுள்விருத்தி மற்றும் நோய் நிவாரணத்திற்கானது

தன்வந்திரி ஹோமம் - நோய் நிவாரணம் கிடைக்க செய்யக்கூடியது.

ஸ்வயம்வரா ஹோமம் - திருமணதடை அகன்று விரைவில் திருமணம் கைகூட

சந்தான கோபால கிருஷ்ண ஹோமம் - குழந்தை பேறு கிடைக்க

மேதா தட்சிணாமூர்த்தி ஹோமம் - உயர்கல்வி கிடைக்க வேண்டுவோர் இந்த ஹோமத்தினை செய்யலாம்.

## ஹோமங்களுக்கு ஏற்ற பலன்கள்

ஹோமங்களை நம் வீடுகளில் செய்வதன் மூலமும், ஆலயங்களில் நடைபெறும் ஹோமங்களில் பங்கு பெறுவதன் மூலமும் நமது கர்ம வினைகளை ஓரளவு குறைத்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு ஜீவ ராசியும் தன் வினைகளுக்கு உரிய பலன்களை அனுபவித்து தான் தீர வேண்டும். என்றாலும், ஹோமங்கள் செய்வதன் மூலமும், பிற இடங்களில் நடைபெறும் ஹோமங்களில் கலந்து கொள்வதன் மூலமும் விசேஷ நற்பலன்களைப் பெற முடியும்.

வழிபாட்டு முறைகளில் ஹோமங்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஒரு குறிப்பிட்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்ய வேண்டுமானால், அதற்குரிய ஹோமத்தை செய்வதன் மூலம் அந்த தெய்வத்தின்

அனுக்ரஹத்தைப் பெற முடியும். கோவைக்குச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தால், கோவை செல்லும் ரயிலில்தான் ஏறி அமர வேண்டும். மதுரை செல்லும் ரயிலில் ஏறி அமர்ந்தால், கோவைக்குப் போக முடியாது. அது போல நாம் எந்த தெய்வத்தை நினைத்து - என்ன பிரார்த்தனையை வைக்கிறோமோ, அதைக் கட்டாயம் அந்த தெய்வம் நிறைவேற்றித் தந்து விடும்.

என்ன ஒன்று... நம் பிரார்த்தனையில் ஆத்மார்த்தம் இருக்க வேண்டும். சஞ்சலங்கள் இருக்கக் கூடாது. இன்றைக்கு ஹோமங்கள் என்று எடுத்துக் கொண்டால் ஆயிரக்கணக்கான ஹோமங்கள் பழைய நூல்களில் சொல்லப் பட்டிருக்கின்றன.



தேக ஆரோக்கியம், செல்வ வளம், மன நிம்மதி, பரிபூரண ஆயுள், நிரந்தர வேலை, திருமண பாக்கியம், குழந்தை பாக்கியம், எதிரிகளின் தொல்லை தீர்த்தல், வியாபார அபிவிருத்தி என்று ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவைப் படுவதைப் பெறுவதற்கு ஹோமங்கள் பேருதவி புரிகின்றன.

எல்லா ஹோமங்களையும் நாம் வசித்து வரும் வீடுகளில் செய்ய முடியாது. வீட்டில் தான் ஹோமங்கள் அனைத்தையும் செய்தாக வேண்டும் என்கிற கட்டாயமும் இல்லை (வசதி வாய்ப்பு குறைந்தவர்கள் தங்களால் வீட்டில் ஹோமம் செய்ய முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம். அத்தகையவர்கள் பொதுவாக நடைபெறும் யாகங்களில் பங்கு பெறலாம்).

தேச நன்மை கருதியும், நாம் வசிக்கும் ஊரின் நலன் கருதியும் ஆலயங்கள், மண்டபங்கள் போன்ற பொது இடங்களில் பிரமாண்ட அளவில் ஹோமங்கள் நடக்கும் போது நம் சக்திக்கு முடிந்த வழிபாட்டுப் பொருட்களை வாங்கி அங்கே அர்ப்பணிக்க வேண்டும்.

எதுவுமே வாங்கித் தர முடியாதவர்கள், தங்களால் முடிந்த உடல் உழைப்பைக் கொடுக்கலாம். அதற்கு ஈடு இணை இல்லை. ஆலயம் மற்றும் பொது இடங்களில் ஹோமங்கள் நடத்தப்படும் போது அதன் பலன்கள் அனைவருக்கும் போய்ச் சேரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஹோமத்தின் சங்கல்பதாரர் என்று ஒருவர் இருந்தாலும், இந்த ஹோமத்தில் கலந்து கொள்ளும் அனைவருக்குமே அதற்குண்டான பலன் கிடைக்கிறது.

~ கோவை லெட்சிமி சிவா



Special Birthday Ritual Packages for You

Get 40% OFF

Call: 95004 95008

# எண் கணிதத்தில் பெயர் எண்களின் சிறப்பு

நமது சத்வித்யாவின் கடந்த இதழில் சிறப்புப் பெயர் எண்கள் என்ற வரிசையில் 8ம் எண்ணைப்பற்றி பார்க்க ஆரம்பித்தோம். 8 என்ற எண் சனிபகவானின் ஆதிக்கம் கொண்டது சனி என்றால் lord of Karma, Lord of Justice என்று பொருள்.

பூர்வ ஜென்மத்தின் பயனும் நீதி நேர்மைப் படியும் 8ம் எண்ணில் ஒருவர் பிறந்திட காரணம் ஆகிறது.

8எண் வெறுக்கத்தக்கதோ, ஒதுக்கத்தக்கதோ அல்ல! 8 என்று பெயர் எண் வரும்படி அதாவது, 17, 26, 35, 44, 53... இப்படி பெயர் எண் உள்ள பலர் வெற்றியாளர்களாக இருப்பதைக் காண முடியும். அவர்கள் அனைவரும் பூர்வஜென்ம வினையால் வழிநடத்தப்படுபவர்களே!



குறிப்பாக 17, 26 என்று வரும்படி பெயர் உள்ளவர்கள் பொறுமை சாலிகளாகவும் அமைதியான சுபாவம் கொண்டவர்களாகவும் இருப்பர்! 35என்று வரும்படி பெயர் வைத்தால் நாலு பேருக்கு நல்லதை எடுத்து சொல்லும் புத்திசாலிகளாக இருப்பர். ஆனால், இவர்கள் வசதி வாய்ப்பில் சராசரி வாழ்க்கையே வாழ்வார்கள். 44, 53 என்று பெயர் அமைந்தால். அவர்கள் ஓட்டல், திரையரங்கு, டிராவல்ஸ் போன்ற துறைகளில் வெற்றியாளர்களாக திகழ்வார்கள், 62 என்று வரும்படி அமையும் பெயர்களும் தொழில் நிறுவனங்களும் ஆடம்பரமான நிலையும் அளவுக்கு மீறி ஆசைப் படும்போது நஷ்டங்களும் உண்டாகும் வண்ணம் அமையும்.

பொதுவாக, 8 என்று வரும்படி அமையும் தொழில்கள் மற்றும் நபர்கள் மக்களை தன்வசம் ஈர்க்கும் ஓட்டல், திரையரங்கம் போன்றவையும் மக்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு சேர்க்கும் போக்குவரத்து போன்றவையும் அதிர்ஷ்டகரமான வெற்றியை கொடுக்கும். அடுத்து, 9ம் எண். எண்கணிதத்திலேயே இறுதியான, உச்சமான எண் 9 ஆகும். இதனுடன் எந்த எண்ணைக் கூட்டினாலும் அந்த எண்ணே இறுதி வடிவம் பெறும் என்பதால் 9 எண்ணிற்கு தனிச்சிறப்பு உண்டு. 18 என்று வரும்படி பெயர் அமைந்தால், அவர்களுக்கு பார்ப்போர் கண்ணில் தெரியும் படியாக தழும்போ, காயமோ நிரந்தரமாக இருக்கும்!

27 என்று பெயர் அமைந்தவர்கள், தங்கள் தொழிலில் மேன்மையும் புகழும் அடைந்து வெற்றி பெற்றவராய் திகழ்வார்கள்.

36 என்று வரும்படி பெயர் அமைந்தால் பிறந்த இடத்திலிருந்து வெகுதூரம் சென்றபின் அதாவது, ஊர்விட்டு ஊர்வந்து உன்னதமான நிலையுடன் செல்வாக்கோடு இருப்பார்கள்.

45 என்று பெயர் அமைந்தால் பிரபலமான மனிதராகவும் தவறுகளே செய்தாலும் அதை பிறர் பொருட்படுத்தாமலும் புகழ் குன்றாமலும் வாழ்வர். 54 என்ற எண்ணும் நல்ல வளமான வாழ்வினைத் தரும்.

63 என்று தொழில் நிறுவனங்களுக்கு. பெயர் வைத்தால் முதலாளிக்குத் தெரியாமல் தொழிலை நிர்வாகம் செய்பவர்களால் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

72 என்று தொழில் நிறுவனத்தின் பெயர் அமைந்தால் அவர்கள் சேர்க்கும் செல்வம் பல தலைமுறைகளுக்கு நிலைத்து நிற்கும். இவையெல்லாம் 9 என்று வரும்படி பெயர் எண் வைப்பதால் உண்டாகும் சிறப்புகள்

~ பன்னீர்செல்வம்






# சர்வ காரிய சித்தி தரும் – மந்திரங்கள்

## "ஓம் நமோ நாராயணாய"

நாராயண உபநிஷத்

குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்

படுதுயராயின வெல்லாம்

நிலந்தரச் செய்யும் நீள்விசும்பருளும்

அருளொடு பெருநிலமளிக்கும்

வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்ற

தாயினு மாயினசெய்யும்

நலத்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்

நாராயணா வென்னும் நாமம்.

## ஓம் நமோ நாராயணாய

ஓம் என்பது ஓரெழுத்தாகவும், நம என்பது இரண்டெழுத்தாகவும், நாராயணாய என்பது ஐந்தெழுத்தாகவும் ஆக மொத்தம் எட்டெழுத்தும் சேர்ந்து நாராயண அஷ்டாக்ஷரம் எனப்படும். இதைத் தொடர்ந்து கூறிவர நிறைந்த ஆயுள் கிடைக்கும். எல்லாவித ஆபத்துக்களும் நீங்கும். தீமைகள், துன்பங்கள் தொடராது. முக வசீகரம் கிடைக்கும். எல்லாச் செல்வங்களும் கிட்டும். காலையில் இதை கூறுபவன் இரவில் செய்த பாவத்தை நாசம் செய்கிறான். மாலையில் கூறுபவன் பகலில் செய்த பாவத்தை நாசம் செய்கிறான். உச்சிப்பொழுதில் கூறுபவன் ஐந்துவித மகா பாதகங்கள், உப பாதகங்களிலிருந்து விடுபடுகிறான். எல்லா வேதங்களையும் ஓதிய புண்ணியத்தை அடைகிறான்.

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்



# ஸ்ரீ கசவன ஜோதி மௌன நிர்வாண சுவாமிகள்

சத் வித்யாவின் இந்த இதழில் நாம் தரிசனம் செய்யவிருப்பது, கசவனம்பட்டி மகானின் ஜீவ சமாதி!

இவரை மௌன சாமிகள் என்றும் நிர்வாண சுவாமிகள் என்றும் பக்தர்கள் கொண்டாடுகின்றனர்!

இவர் யார்? இவரது பெற்றோர் யார்?

இவரது இயற்பெயர் என்ன? எந்த ஊர்? என்ற எந்த விபரமும் இதுவரை யாருக்கும் தெரியாது.

அப்படியென்றால்...யார் இவர்?

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்னால்...


கசவனம் பட்டி என்ற இந்த ஊருக்கு அருகில் செடிகளும் புதர்களும் மண்டிய சிற்றூரின் ஒரு பகுதி! அந்த இடத்தில் கசவனம் பட்டியைக் சேர்ந்த சிலர் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள்! அங்கே...சுமார் பத்து வயதே நிரம்பிய ஒரு சிறுவன், உடலில் ஆடையேதும் இல்லாமல் பிறந்த மேனியுடன், தன் நிலை மறந்து, வானத்தை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருப்பதை ஆடு, மாடு மேய்ப்போர் கண்டனர்! பாவம்.. உடுத்த ஆடையே இல்லாத இந்த சிறுவன், எப்படி சாப்பிட்டிருப்பான்? என பரிதாபப்பட்டு தாங்கள் கொண்டு வந்து கஞ்சி, கூழ் ஆகியவற்றை அந்த சிறுவனுக்குக் கொடுக்க, அதை எப்படி எடுத்து சாப்பிட வேண்டும் என்பதைக்கூட அறியாதவனாய் சிறுவன் இருக்க, அவனுக்கு உணவை ஊட்டிவிட, ஏதோ கொஞ்சமாய் உண்ணுகிறான் சிறுவன்! தங்கள் உடைகளை அந்த நிர்வாண சிறுவனுக்குக் கொடுத்து உடுத்திவிட, உடனே அதனைக் களைந்து கிழித்தெறிகிறான். ஆச்சர்யம் அடைகிறார்கள் அனைவரும் இவன் பித்தனா? சித்தனா? என்று எந்த முடிவுக்கும் வர முடியாமல் தாங்கள் ஊர் திரும்பும் வேளையில் சிறுவனை தங்களுடன் கசவனம் பட்டிக்கு அழைத்து வருகிறார்கள்.

ஊரில் உள்ள பெரியோர் உடையளிக்க, அதை ஏற்க மறுக்கும் சிறுவனை சிலர் புதுமையாய் பார்க்க, சிலர் பரிகாசம் செய்து தங்கள் கோபத்தைக் காட்டுகின்றனர். அப்படி, சிறுவனைக் கடிந்து கொண்டோருக்கு சங்கடங்கள் தலைதூக்குகின்றது. அதன்பிறகு யாரும் உடையணிவிக்கும் முயற்சியில் இறங்கவில்லை, அந்த சிறுவனிடம் ஏதோ ஒரு சக்தி உள்ளதை அனைவருமே உணர்கின்றனர். நீ யார்? எந்த ஊர்? பெற்றோர் யார்? உன் பெயர் என்ன? என்ற எந்த கேள்விக்கும் பதில் கூறாமல், எங்கோ பார்த்தபடி சிரித்து,

பரிபாஷை பேசும் சிறுவனை, இவன் பிரபஞ்சத்தோடு பேசுபவன் என்பதை மெல்ல உணர்ந்து, ஊரில் உள்ள அனைவரும் கடவுளின் குழந்தையாகவே போற்றிப் பாதுகாத்து வந்தனர்.

ஆண்டுகள் கூடக்கூட, சிறுவனின் உடலும் வளர்கிறது, அனால், அந்த நிர்வாணக் கோலம் யாருக்குமே விகல்பமாய் படவில்லை, வந்த நாள்முதல் சிறுவன் நிகழ்த்திய அற்புதங்களைக் கண்டு மெய் சிலிர்த்துப் போனார்கள், மக்கள்!

யாருக்கு என்ன குறை என்றாலும் இவன் பார்த்தாலே நிவாரணம் கிடைக்கிறது, பார்ப்பவர் கண்களுக்கு வளர்ந்த வாலிபனின் அந்த நிர்வாணக்கோலம் அசூயை ஏற்படுத்தவில்லை மாறாக, ஒரு குழந்தைப் போலவே கண்ணுக்குப் புலனாகியது. நெடிதுயர்ந்த உருவம்!



ஒல்லியான தேகம்! ஒலி பொருந்திய கண்கள்! தெய்விகக் கலை சிதறிக்கிடக்கும் முகம்! பார்த்தால் பாவம் விலகுகிறது! தொட்டால் தோஷங்கள் தூளாகிறது! இவர் சாதாரண மனிதரல்ல: மண்ணில் உலவும் மகான்; பூமிக்கு வந்த புனிதர்; இன்பம் தரவல்ல இறைவன் என்பதை எல்லோரும் உணர்ந்து, இந்த தெய்வத்தை கொண்டாடி மகிழ்ந்தனர்!

இவர் வாய்திறந்து பேசியதில்லை என்றாவது ஓரிரு வார்த்தைகள் பேசினாலும் எவருக்கும் புரியாத பாஷை! எல்லாமே சைகையில் தான்! யாராவது ஊட்டி விட்டால் ஒருவாய் உணவு! ஆண்டிற்கு ஒரு முறை யாராவது முடி வெட்டவோ, குளிப்பாட்டவோ முயற்சி செய்தால் அனுமதி! இப்படி இருக்க ஒரு மகானால் மட்டுமே முடியும் என்பதை அனைவரும் உணர்ந்தனர்! என்பது வயதிணைக் கடந்த நிலையிலும் இதே நிர்வாண கோலத்தோடு ஊரில் உள்ள எந்த வீட்டிற்குள்ளும் நுழைவார்! சமையலறை வரை சென்று அங்கு உள்ளதை ஒரு வாய் சாப்பிடுவார்!

இவரைக்கான வருபவர்கள் கொடுக்கும் பலகாரம் எதுவாயினும் சிறிது மிச்சத்தை பிரசாதமாய் உண்டவர்கள் தங்கள் நோய்கள் நீங்கப் பெற்றனர் தங்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டனர்! கண்கண்ட தெய்வம் இவள் என்று கண்மூடி தொழுதனர்!

இப்படி நிர்வாண கோலத்தில் இருப்போரை அவதூதர் என்று ஆன்மீகம் உரைக்கும்! இன்பம் துன்பம்; நல்லது -தீயது; உயர்ந்தது - தாழ்ந்தது எண்ணும் பேதமற்ற பிறவிக்கோலம்! இது தான் உண்மையான துறவி! மணிக்கணக்கில் பேசி, பிரசங்கம் செய்ததில்லை! ஆனால், மக்களின் மனங்களில் ஞான வித்துகளை விதைத்துக் கொண்டே இருந்தார்.

நாம் அனைவரும் அறிந்த தென் முகக்கடவுள் தட்சிணா மூர்த்தி, தன் சீடர்களுக்கு சொல்லே இல்லாமல் எப்படி உபதேசம் செய்தாரோ அப்படித்தான் இவரது மௌனநிலை இருந்தது.

வெற்றுடம்போடு சுடும் பாறையில் அமர்வார்! பக்தர்கள் சென்று தொழுதால் கண்டு கொள்ளவே மாட்டார்

ஆனால், இவரை கண்ணால் பார்த்தாலே கஷ்டங்கள் விலகி, நிம்மதி கிடைக்கும்.
பெரும்பாலும் இவரைப் பார்க்கவரும் பக்தர்கள், டீ வாங்கிக் கொடுப்பர்! அதில் சிறிது குடித்து விட்டு மீதத்தைக் கொடுப்பார்! அதையே அதையே பிரசாதமாய் ஏற்பார்கள்! இதுதவிர, பக்தர்கள் எல்லோரும் இவருக்குக் கொடுப்பது சிகரெட்! அவற்றை மட்டும் தவறாமல் புகைப்பார்! அந்த சிகரெட் சாம்பலே பலரது சிக்கலைத் தீர்த்திருக்கிறது, நோய்களை விரட்டியிருகிறது

இன்னும் பல அற்புதங்கள் நிகழ்த்திய இந்த கசவன ஜோதியின் மகிமைகளை அடுத்த இதழில் பார்ப்போம்!
அடுத்த இதழில் தொடரும்

~ பன்னீர்செல்வம்






உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும்
சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்
www.priestservices.com போன்: 95004 95008

# லட்சுமி குபேர எந்திரம்

குபேரன் நீங்காத செல்வத்தை அள்ளித் தருபவர். ஆனால் செல்வத்துக்கு கடவுள் மகாலட்சுமி. செல்வத்தை பக்தர்களுக்கு முறையாக பகிர்ந்து அளிக்க அவர் பணித்தார். எனவே தான் குபேரன், லட்சுமி குபேரன் என்று அழைக்கப்படுகிறார்.

குபேர எந்திரம், தன ஆகார்ஷண குபேர எந்திரம், லட்சுமி குபேர எந்திரம் இந்த எந்திரங்கள் முறையை உருஏற்றி வீட்டில் வைத்து பூஜிக்க சகல செல்வங்களும் மங்களங்களும் உண்டாகும்.



தீபாவளித் திருநாளில் லக்ஷ்மி குபேரனை பூஜை செய்வதால் நமக்கு திருமகள் அருளும் குபேரனுடைய அருளும் கிட்டும். ஏனென்றால், தீபாவளி தினத்தில்தான் மங்கள ரூபனாகிய சிவபெருமான் தன்னிடம் உள்ள நிதிப்பொறுப்புகளை குபேரனுக்கு அளித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

பூஜை தொடங்குவதற்கு முன்பு தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டு இடையில் எழுந்திருக்காமல் மனதை ஒருமுகப்படுத்திச் செய்ய வேண்டும்.

ஒரு காமாட்சி தீபம் ஏற்றி பூஜையை ஆரம்பிக்க வேண்டும். ஸ்ரீ மஹாலக்ஷ்மி படத்தின் முன்போ அல்லது ஸ்ரீ லட்சுமி குபேர படத்தின் முன்போ எந்திரதை வைத்து குபேர அஷ்டோத்திரம் சொல்லி வாசனை உள்ள புஷபத்தை கொண்டு பூஜை செய்து பால்பாயாசம் நைவேத்தியம் செய்ய வேண்டும். தீப தூப கல்பூர ஹாரத்தி செய்து நமஸ்கரம் பன்ன வீட்டில் சகல ஐஸ்வர்யம் பெருகும். வருகின்ற தீபாவளி திருநாளில் உங்களுக்கு பிடித்தமானவர்க்கு இந்த எந்திரதை பரிசாக தரலாம். அவர்கள் பூஜை செய்யும் புண்ணியம் நம் குடும்பத்திற்கம் நன்மை பயக்கும்.

## குபேரன் காயத்ரி மந்திரம்

ஓம் யக்ஷராஜாய வித்மஹே
வைஸ்ரவ ணாய தீமஹி
தந்நோ குபேர ப்ரசோதயாத்

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்




# மேஷம்

- அனைத்து காரியங்களிலும் திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள்.
- ஆளுமைத்திறன் அதிகரிக்கும்.
- அனைத்து பிரச்சினைகளையும் வெற்றி கொள்ள முயற்சி எடுப்பீர்கள்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும்.
- பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு.
- மனதில் தைரியம், உற்சாகம் அதிகரிக்கும். தாய்க்கு மருத்துவ செலவுகள் உண்டாகும்.
- பங்கு சந்தையில் லாபம் உண்டு.
- எதிர்பாராத தடைகளும், பிரச்சினைகளும் உருவாகும்.
- இருப்பினும், அனைத்தையும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள்.
- தந்தையால் அனுகூலம் உண்டு.
- உங்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி கிடைப்பார்.
- காதல் இனிக்கும். இருப்பினும், காதலர்களுக்குள் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் வந்து மறையும்.
- புதிய காதல் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.
- இந்த மாதம் மாணவர்களுக்கு படிப்பில் மந்த நிலை காணப்படும்.
- தேவையற்ற விஷயங்களில் கவன சிதறல் ஏற்படும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ முருகப்பெருமான் மற்றும் ஸ்ரீ காலபைரவர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.




# ரிஷபம்

- மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவார்கள்.
- தாயின் அன்பும், அரவணைப்பும் கிட்டும்.
- சுக போகங்களில் ஆழ்ந்து செல்ல வேண்டாம்.
- வாகன யோகம் உண்டு.
- குடும்ப விஷயங்களில் கவனம் தேவை.
- மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.
- சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. வெளியூர் பயணங்களால் நன்மை உண்டாகும்.
- குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை.
- கணவன் மனைவி ஒற்றுமையுடன் இருப்பது நல்லது.
- உங்கள் முயற்சிகளில் சிறு, சிறு தடைகளும், பிரச்சினைகளும் வந்து நீங்கும். தந்தையுடன் சிறு, சிறு கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- முயற்சிகள் திருவினையாகும்.
- நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.
- காதல் விஷயங்களில் கவனம் தேவை.
- காதலர்களுக்குள் கருத்து வேறுபாடு வந்து நீங்கும்.
- புதிய காதல் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.
- மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.
- சிறு உடல் பிரச்சினைகள் வந்து நீங்கும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மர் மற்றும் ஸ்ரீ ராகவேந்திரர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.



# மிதுனம்

- உடல் நிலையிலும், மன நிலையிலும் அக்கறை தேவை.
- பலவிதமான குழப்பங்கள் ஏற்படும்.
- குழந்தைகளினால் செலவுகள் அதிகரிக்கும்.
- உடல்நலனில் சிறப்பு கவனம் தேவைப்படலாம்.
- எதிரிகளால் தொல்லை ஏற்படும்.
- பலவீனத்தால் பாதிக்கப்படலாம்.
- செலவுகள் அதிகரிக்கக்கூடும், எனவே கட்டுப்பாடு அவசியம்.
- கீழே பணிபுரிபவர்களின் தவறான அபிப்ராயங்கள், உங்கள் முயற்சியால் விலகும்.
- எந்த ஒரு தொழிலிலும், செயலிலும் தெளிவு இல்லாமல் காணப்படுவீர்கள்.
- பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மற்றவர்களிடம் மனகசப்பு ஏற்படலாம். இருந்தாலும் இதை எல்லாம் சமாளிப்பீர்கள். ஆரோக்கியம் படிப்படியாக சீரடையும்.
- தொழில் ரீதியாக, நன்மை பயக்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகும்.
- புனித யாத்திரை பயணங்கள் போக வாய்ப்பு ஏற்ப்படும்.
- காதல் வாழ்க்கை இந்த மாதம் சுமாரான மாதமாகும். படிப்பதற்கும்,சிறந்தகல்வி அனுபவத்தைப் பெறுவதற்கும் இது சரியான நேரம்.

## பரிகாரம்:

- ஸ்ரீ முருகப்பெருமான் மற்றும் ஸ்ரீ காலபைரவர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.




# கடகம்

- அதிர்ஷ்டமான காலமாகும்.
- வாழ்வில் இருந்த பிரச்சினைகள் தீர தேவையான ஆலோசனையும், வழிகாட்டுதலும் கிடைக்கும்.
- அதிர்ஷ்ட தேவதையின் ஆசி உண்டு.
- பேச்சால் அனைவரையும் கவர்ந்து இழுப்பீர்கள். இருப்பினும் அதிக பேச்சை தவிர்ப்பது நல்லது.
- மனதில் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.
- முயற்சிகள் வெற்றி அடையும்.
- சகோதர சகோதரிகளால் நன்மை உண்டு.
- புதிய, வீடு, நிலம், வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் ஈடேறும்.
- உடல் நிலையில் சிறு, சிறு பாதிப்புகள் வந்து நீங்கும்.
- மறைமுக எதிரிகளால் பிரச்சினை உருவாக பாதிப்பு உள்ளதால் கவனம் தேவை.
- குழந்தைகள் விஷயத்தில் கவனம் தேவை.
- குழந்தைகள் உடல் நிலை பாதிப்படையும்.
- காதல் கசக்கும். காதலர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- புதிய காதல் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.
- இல்லறம் இனிக்கும்.
- கல்வியில் நடுநிலை வகிப்பீர்கள். நண்பர்களுடன் அதிக நேரம் அரட்டை அடிப்பதையும், வெளியில் சுற்றுவதையும் விட்டுவிட்டு படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

## பரிகாரம்:

- திருப்பதி வெங்கடாஜலபதி மற்றும் ஸ்ரீ மத் ராமானுஜர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.




# சிம்மம்

- பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் தரும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். இருப்பினும் முன் கோபத்தை தவிர்ப்பது நல்லது.
- சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு.
- தாய் உடல் நலத்தில் கவனம் தேவை.
- தாயுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- பழைய வாகனங்களை பழுது பார்த்து சரி செய்வீர்கள்.
- குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.
- எதிரிகளால் சிறு, சிறு பிரச்சினைகள் வந்து நீங்கும்.
- எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும்.
- தந்தையுடன் வாக்கு வாதங்கள் வர வாய்ப்புள்ளதால் கவனம் தேவை.
- கண்ணும் கருத்துமாக செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள்.
- வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.
- காதல் இனிக்கும். காதலர்களுக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும்.
- புதிய காதல் முயற்சிகள் நிறைவேறும்.
- படிப்பில் கவனம் தேவை.
- மாணவர்கள் படிப்பை தவிர மற்ற விஷயங்களில், தங்களது கவனம் திசை திரும்பாமல் பார்த்து கொள்வது நல்லது.

### பரிகாரம்:

- சிவபெருமான் மற்றும் காலபைரவர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.



# கன்னி

- யோகமான அமைப்பு ஆகும்.
- முயற்சிகள் அனைத்தும் பணம் ஈட்டுவதிலும்,குடும்பத்தை வழி நடத்துவதிலும் இருக்கும்.
- சுப செலவுகள் அதிகரிக்கும்.
- வீண் செலவுகளை தவிர்ப்பது நல்லது.
- மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.
- சிறு, சிறு தடைகளை சந்தித்தாலும், விடா முயற்சியால் வெற்றி பெறலாம் என்பதை உணரும் காலம்.
- வாகன பயணங்களில் கவனம் தேவை.
- இரவு நேர பயணம், நீண்ட தூர பயணங்களை தவிர்ப்பது நல்லது.
- குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.
- அளவுக்கு மீறிய சிந்தனை வீண் குழப்பத்தை ஏற்படுத்தும்.
- குழந்தைகளுக்கு வேலை கிடைக்கும்.
- தந்தையால் அனுகூலம் உண்டு.
- வெளியூர், வெளிநாடு கல்வி, வேலை வாய்ப்பிற்காக செல்லும் முயற்சிகள் கை கூடும்.
- காதல் இனிக்கும். காதலர்களுக்கிடையே அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். புதிய காதல் முயற்சிகள் கை கூடும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ மந் நாராயணன் மற்றும் ஸ்ரீ ராகவேந்திரர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.



# துலாம்

- அதிர்ஷ்ட தேவதையின் ஆசி உங்களுக்கு கிடைக்கும்.
- வாழ்வின் முன்னேற்றதிற்கு சரியான வழி காட்டுதல் கிடைக்கும்.
- இருப்பினும் வீண் விரயங்களை தவிர்ப்பது நல்லது.
- எதிலும் அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பதை உணர்ந்து செயல்படுங்கள்.
- பேச்சில் கவனம் தேவை.
- முயற்சிகளில் சிறு, சிறு தடைகள் இருந்தாலும் அனைத்தையும் சமாளித்து விடுவீர்கள்.
- தாயுடன் சிறு, சிறு பிரச்சினைகள் இருந்தாலும், அவரின் செயல்பாடுகள் உங்களுக்கு சாதகமாகவே இருக்கும்.
- குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.
- நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.
- காதல் சாதாரணமானதாக இருக்கும்.
- காதலர்களுக்குள் அமைதி நிலவும்.
- புதிய காதல் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.
- படிப்பதை தள்ளிப்போடாமல் அன்றைய பாடங்களை அன்றைக்கே படிக்கும் பழக்கத்தை வைத்து கொள்ளுங்கள்.

## பரிகாரம்:

- ஸ்ரீ ரங்கநாதர் மற்றும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

# விருச்சிகம்




- நன்மை மற்றும் தீய பலன்களை கலந்தே செய்யும்.
- உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை.
- எந்த விஷயத்திலும் எதிர்த்து போராடி வெற்றி பெரும் சூழ்நிலை ஏற்படும்.
- இந்த நேரத்தில் பொறுமை, நிதானம் அவசியம்.
- பேச்சில் கவனம் தேவை.
- பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும்.
- மனதில் தைரியம், உற்சாகம் அதிகரிக்கும்.
- முயற்சிகள் திருவினையாகும்.
- தாயின் அன்பும், அரவணைப்பும் உண்டு.
- பூர்வீக சொத்து விஷயங்கள் சாதகமாகும்.
- எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு.
- எதிரிகள் விலகி செல்வார்கள்.
- தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு.
- பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.
- காதல் இனிக்கும். காதலர்களுக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும்.
- புதிய காதல் முயற்சிகள் சாதகமாகும்.

### பரிகாரம்:

- ஸ்ரீ முருகபெருமான் மற்றும் துர்க்கை வழிபாடு பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

# தனுசு



- எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் நிலை உருவாகும்.
- எதிலும் நன்கு சிந்தித்து பொறுமை, நிதானமுடன் செயல்படுங்கள்.
- பேச்சில் கவனம் தேவை.
- குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும்.
- குடும்பத்தின் தேவைக்கான பொருளாதார நிலை இருக்கும்.
- தாயின் உடல் நிலையில் கவனம் தேவை.
- குழந்தைகளின் உடல் நிலையில் பாதிப்பு உண்டாகும்.
- எதிரிகள் விலகி செல்வார்கள். உடல் ஆரோக்கியம் நலம் பெறும்.
- இல்லறம் இனிக்கும்.
- தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- புகழ், அந்தஸ்து, செல்வாக்கு அதிகரிக்கும்.
- ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.
- காதலர்களுக்குள் சிறு, சிறு கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- புதிய காதல் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.
- படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.
- தேவையற்ற நட்பிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் விலகி இருங்கள்.

## பரிகாரம்:

- ஸ்ரீ குருபகவான் மற்றும் ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.



# மகரம்

- யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம்.
- வீண் விரயங்களை தவிர்ப்பது நல்லது.
- மற்றவர்களுக்காக ஜாமீன் போன்ற விஷயங்களில் தலையிட வேண்டாம்.
- சோம்பலை தவிர்க்கவும்.
- எதிலும் கவனம் மற்றும் விழிப்புணர்வுடன் செயல்படுங்கள்.
- பேச்சில் கவனம் தேவை.
- யாரிடமும் விரோதம் வளர்க்க வேண்டாம்.
- பொருளாதார நிலையில் ஏற்ற தாழ்வு உண்டாகும்.
- தாயுடன் சிறு, சிறு கருத்து வேறுபாடு வந்தாலும் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும்.
- குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை.
- கணவன் மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும்.
- தொழிலில் மந்தநிலை ஏற்படலாம்.
- எண்ணங்கள் ஈடேறும்.
- வெளிநாடு செல்வதற்கான முயற்சிகள் கை கூடும்.
- காதல் விஷயங்களில் கவனம் தேவை.
- காதலர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.
- உடல் நலனில் அதிக அக்கறை தேவை.
- காதல் போன்ற தேவையற்ற விஷயங்களால் உங்கள் படிப்பு பாதிக்கப்படும்.

## பரிகாரம்:

- ஸ்ரீ ஆஞ்சநேயர் மற்றும் நரசிம்மர் பூஜை, வழிபாடு மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

# கும்பம்




- தேவையற்ற வீண் விரயங்கள் ஏற்படும்.
- மற்றவர்களுக்கு ஜாமீன் போன்ற விஷயங்களில் ஈடுபட வேண்டாம்.
- மருத்துவ செலவுகள் ஏற்படலாம்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும்.
- உங்கள் குடும்பத்திற்கு தேவையான பொருளாதார வரவு உண்டு.
- நீண்ட நாளாக வங்கியில் முயற்சித்து கொண்டிருந்த கடன் கிடைக்கும்.
- மனதில் தைரியம், உற்சாகம் அதிகரிக்கும்.
- சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு.
- தாய் உடல் நலனில் கவனம் தேவை.
- தாயுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.
- இல்லறம் இனிக்கும்.
- தந்தையுடன் சிறு, சிறு மனஸ்தாபங்கள் வந்து நீங்கும்.
- தொழிலில் சிறு பிரச்சினைகளையும், தடைகளையும் சந்தித்தாலும் முன்னேற்றம் உண்டு.
- காதல் இனிக்கும்.
- காதலர்களுக்குள் இணக்கம் அதிகரிக்கும்.
- புதிய காதல் முயற்சிகள் கை கூடும்.
- படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.
- உங்கள் முயற்சிகள் திருவினையாகும்.
- அதிக மதிப்பெண் எடுத்து சாதனை புரிவீர்கள்.

## பரிகாரம்:

- திருசெந்தூர் முருகபெருமான் மற்றும் சித்தர்கள் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.
- மீன்களுக்கு உணவு இடுதல்

# மீனம்



- தொழிலில் சிறு, சிறு தடைகளையும், பிரச்சினைகளையும் சந்திப்பீர்கள்.
- எதிலும் ஆழ்ந்து செல்லாமல், அளவுடனும், கட்டுப்பாடுடனும் செயல் படுவது நல்லது.
- குடும்பத்தில் சிறு, சிறு பிரச்சினைகள் வந்தாலும் பாசப்பினைப்பு அதிகரிக்கும்.
- பொருளாதார நிலையில் ஏற்ற, தாழ்வு இருந்தாலும், தேவை நிறைவேறும்.
- மனதில் தைரியம், உற்சாகம் அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.
- தாயுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.
- குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.
- குலதெய்வத்தின் அருளை பெறுவீர்கள்.
- பங்கு சந்தையில் லாபம் பெறுவீர்கள்.
- எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு.
- தந்தை உடல் நிலை பாதிக்க கூடும்.
- தந்தையுடன் கருத்து வேறுபாடுகள்வந்து நீங்கும்.
- காதல் இனிக்கும், புதிய காதல் முயற்சிகள் கை கூடும்.
- காதலர்களுக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும்.
- மாதம் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.
- சோம்பலை தவிர்த்து தொடர்ந்து படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி கொள்ளுங்கள்.
- வீணான விசயங்களிலும், அரட்டைகளிலும் கால நேரத்தை வீணாக்க வேண்டாம்.

## பரிகாரம்:

- திருச்செந்தூர் முருகப்பெருமான் மற்றும் ஸ்ரீ மத் ராமானுஜர் வழிபாடு, பூஜை மற்றும் ஆலயங்கள் சென்று வழிபடுதல்.

~ ஜோதிடர் ஜெயம் ஜனார்தனன்